1396

THE PARIDIMARKALAIJNAN PUBLICATION NO. 15.

# HARI HARA BAKTHAS.

## (SAKUNTA & ANGULA).

*Specially prepared for the use of Lower Secondary classes.*

BY

E. S. GOVINDA AYYANGAR,

HEAD TAMIL PANDIT,

BOARD HIGH SCHOOL, USILAMPATTI.

OFFICE OF THE REGISTRAR OF ...
No.
11 MAR 1927
MADRAS

V. S. SWAMINATHAN,

Bookseller, Publisher & Stationer,

*West Tower Street, Madura.*

1926

PRICE 0-3-0.

TB
0-,3x
N26
184408

READY! READY!! LOOK SHARP!!!

MODERN

ELEMENTARY MATHEMATICS.

BOOK I FOR FORM I.

*by*

*S. Narayana Ayyar B. A., L. T.,*

LECTURER IN MATHEMATICS,

MADURA COLLEGE, MADURA.

*With an introduction by*

*M. R. Ry. K. S. Appaswamy Ayyar Avl, B. A L. T.,*

Headmaster, Govt. Model School, Teachers, College, Saidapet.

---

*By the Same Author*

BOOK II FOR FORM II

With an introduction by

*Rao Bahadur. P. V. Seshu Ayyar Avl, B. A., L. T.,*

Principal, Government college Kumbakonam.

---

*By the same Author*

BOOK III FOR FORM III

With an introduction by,

*M. R. Ry. C. N. Ganapathi Ayyar Avl., M. A., L. T.,*

Lecturer in Mathematics,

GOVERNMENT ART'S COLLEGE RAJAMANDRY.

Each Book Price Rupee One.

*Published by*

V. S. Swaminathan, Bookseller, Madura.

பரிதி மாற் கலைஞன் பிரசுரம்:—15.

உ

# ஹரிஹர பக்தர்கள்.

## (சகுந்தன், அங்குலன்.)

புதுமையான இரு புராணக் கதைகள்.

---

இது,
உசிலம்பட்டி, போர்டுஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியர்,

ஸ்ரீமான் இ. ஸ்ரீ. கோவிந்த ஐயங்கார்,
அவர்கள் எழுதியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1927
MADRAS

வி. சூ. சுவாமிநாதன்,
புக்ஸெல்லர் அண் பப்ளிஷர்,
மேலக்கோபுரத் தெரு.
மதுரை.

காபிரைட்.] 1926 [விலை 0—3—0.

184408

# முகவுரை.

இப்புத்தகமானது பள்ளிக்கூடச் சிறுவர்களின் உபயோகத்திற்காகவே அநேக புராணங்களிலிருந்து எடுத்து எழுதப்பெற்றது. இக்கதைகளிரண்டும் சிறியதாகவிருந்த போதிலும், இதை என்னுடைய சிற்றறிவுக்கெட்டியவாறு விரித்து எழுதியிருப்பதுடன் பலமேற்கோள்களையும் தகுந்த இடங்களில் சேர்த்துள்ளேன். இப்புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் பெயரே இதனுள்ளடங்கியிருக்கும் விஷயங்களைக் கண்ணாடிபோல்காட்டும். எவ்வாறெனில் இதில் ஹரிபக்தனான, சகுந்தனைப்பற்றியும், ஹரபக்தனான அங்குலனைப்பற்றியும் எழுதியிருப்பதாலும் இதுவரையில் வெளியிட்ட அநேகர், வீரவைஷ்ணவராயிருந்துகொண்டு, சிவசம்பந்தமான கதைகளை வைஷ்ணவ புத்தகங்களில் காட்டாமலும், வீரசைவராயிருந்துகொண்டு, வைஷ்ணவசம்பந்தமான கதைகளை சிவசம்பந்தமான புத்தகங்களில் காட்டாமலும் பாரபக்ஷமாக இருந்து வருகின்றனர் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

அவர்களைப்போலல்லாது யான், சைவ, வைஷ்ணவ பக்தர்களிரண்டுபேரையும் ஒரே புத்தகத்தில் விளக்கியிருப்பதுடன் இப் புத்தகத்திற்கு ஹரிஹர பக்தர்கள் என்ற பெயரையும் கொடுத்திருக்கிறேன்.

இதைப் பிரசுரிக்கும் விஷயத்தில் எனக்கு மிகவும் உதவிபுரிந்து இதை அச்சிட ஒப்புக்கொண்டதற்கும், விரைவில் அச்சிட்டதற்கும் ஸ்ரீமான் வி. சு. சுவாமிநாதன் அவர்களுக்கு மிகவும் நன்றிபாராட்டுவேனாகவும்.

இங்ஙனம்.

1—11—,26<br>உசிலம்பட்டி.

இ. ஸ்ரீ. கோவிந்த ஐயங்கார்.

உ

சிவமயம்

# சகுந்தன்.

## சகுந்தன் வேட்டையாடச் செல்லுதல்

பல வளங்களும் நிறைந்து பாவலரும் காவலரும் நாடோரும் நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ நிறைந்திடு மங்கலநாணோ என்று புகழ்ந்துரைக்க, எந்நாட்டினரும் இந்நாடே நன்னாடு எனக் கண்ணாட்டும் சிறப்பினை உடைய தாய்த் திகழ்வது நமது பாரதத் தாய்நாடு. இந்நாடு ஆதியில் ஐம்பத்தாறு சிறு தேசங்களாகப் பிரிக்கப்பப்பட்டிருந்தது.

ஒவ்வொரு பிரிவினையும் ஒவ்வொரு அரசர் ஆண்டுவந்தனர். அவற்றுள் காசி என்னும் பிரிவினை சகுந்தன் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். அவன்,

“தாயொக்கு மன்பில் தவமொக்கும் நலம்பயப்பில்
சேயொக்கும் முன்னின்றொரு செல்கதி யுய்க்கும்நீரல்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்குகேள்வி
ஆயப்புகுங்கா லறிவொக்கும் எவர்க்கும் அன்னான்”

என்றவாறு தன் குடிகளின் நலமே தன்னலமெனக் கருதி ஆட்சி புரிந்துவந்தான்.

ஓர் நாள் குடிகளனைவரும் அவ் வரசன்முன் சேர்ந்தனர். அரசன் அவர்களை அன்புடன் நோக்கி வந்தகாரணம் யாதெனவினவினான். அதற்கு அவர்கள் வனத்தில் வாழும் மிருகங்கள் தங்கள் நிலங்களிலுள்ள பயிர்களை அழிப்பதாகவும், உடனே அவற்றை மாய்க்காவிடில் தாங்கள் மிகவும் வருந்தநேரிடும் என்றும் கூறினர்.

இதைக் கேட்கவும் அரசன் மனம் பதறினான். 'குடியுயரக் கோனுயரும்' என்னும் அமுதன்ன வாக்கியத்தைக் கருதினான். மேலும்,

"மாநிலம் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறம்காப்பான் அல்லனோ"

என்பதை அவன் மறந்தவனல்ல. ஆதலின் தன் மந்திரி மூலம் வேடுவர்களனைவரையும் வேட்டைக்கு ஆயத்தம் செய்வித்து வேட்டையின்மேல் கானகத்திற்குச் சென்றான்.

அங்கு வேடுவர் கொம்பு முதலிய வாத்தியங்களை ஊதியும், கையில் உள்ள கம்பு முதலிய ஆயுதங்களை வீசியும் மிருகங்களைக் கலைத்து ஓட்டினர். அரசனும் மற்றும் அவனைச் சார்ந்தவரும் குடிகளுக்குத் துன்பமிழைத்த பல ஜெந்துக்களையும் வதைத்து நெடுநேரம் வேட்டை ஆடினர், அரசனும் மந்திரியும் மாத்திரம் ஒரு பெரும்புலியைத் துரத்திக்கொண்டு நெடுந்தூரம் சென்றுவிட்டனர்.

அரசன் உணவில்லாமையாலும் நெடுநேரம் வேட்டை ஆடியதாலும் களைத்துக் கீழே சாய்ந்துவிட்டான். மந்திரி

யும் பல உபசாரங்களால் அரசனது மூர்ச்சையை தெளிவிக்க, இருவரும் நாட்டைநோக்கி நடக்க யத்தனிக்கையில் மிகவும் இனிய வீணைகானம் கேட்டு நின்றனர்; செவிக் குணவிருக்குங்கால்வயிற்றுணவும் வேண்டியதில்லையல்லவா?

சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் முனிவர் ஆண்டடைந்தனர். அவரே அரசனது குலகுருவாகிய நாரத முனிவர். பிரமாதி தேவர்களும் வியக்கும்வண்ணம் இனிய இசை பாடும் தத்துவஞானி; சர்வ லோகங்களையும் சிருஷ்டித்த பிரமதேவரது குமாரர்; மகா தேஜஸ்வி; திரிலோக சஞ்சாரி. ஒருவன் சிறிது கோண்முனையின் அல்லது கலகமூட்டிவிடின் 'இதென்ன நாரதராக வந்துதித்தனே?' என்று கூறுவது நம் நாட்டில் சகஜமல்லவா? தினந்தோறும் ஏதேனும் கலகம் இழைக்காவிடில் அவர் தலை வெடித்துவிடுமென்று கடவுளால் ஒரு சாபமிடப்பட்டிருந்ததென்று சிலர் கூறுவர். ஆனால் அவர் மூட்டிவிடும் கலகம் யாவும் எல்லோர்க்கும் இனிமையாகவே முடியும். அக் கானகத்தில் அவர் புகுந்த அன்றுமட்டும் யாதொரு கலகமும் கிடையாததால் முனிவர் சிறிது வாட்டத்துடனே இருந்தனராயினும் காசி வேந்தனை அங்குக் கண்ணுற்ற மாத்திரத்திலேயே அவரது வாட்டம் தீர்ந்தது. முகம் செந்தாமரை போன்று மலர்ச்சி யடைந்தது. உடனே அவர் சகுந்தனை அணுகினர்.

முனிவரைக்கண்ட சகுந்தன் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லையில்லை. உடனே அவர் மலர்ப்பாதங்களில் தன் முடிதோய வணங்கி எழுந்து பல உபசாரமொழிகள் பகர்ந்தான். இவ்வாறு அரசர்கள் ஆதிகாலத்தில் பிராமணர்களிடம் கொண்டிருந்த விசுவாசத்தினலேயே நம் நாடு

செல்வமிருந்து நிகழ்ந்தது. பின் அரசன் முனிவர் முக நோக்கி அவரது வரவின் காரணத்தை வினவினான். முனி வரும் அவனை வாழ்த்தி அருகே இருந்த ஓர் வனத்தில் பல முனிவர்கள் யாகம் செய்வதாயும், தாம் அங்கு செல்வதாக வும் கூறினர். உடனே அரசன் அவரை நோக்கி "குல குருவே! தற்செயலாக வந்த இடத்தில் முனிவர்கள் யாகம் செய்கிறார்கள் என்ற நற்செய்தி பெற்றேன். அடியேனும் ஆண்டுப்போந்து அவர்களை வணங்கி செல்லலாமோ?" என் றான். முனிவர் அவ்வாறு செய்வது உத்தமமென்று கூறிப பின் அவனிடம் விடைபெற்று அகன்றனர். அரசனும் தன் மந்திரியுடன் யாகசாலையை நோக்கி நடந்தான்.

## சகுந்தன் கோசிகர் கோபத்திற் காளாதல்.

அழகிய வனம். வானுற வோங்கி வளம்பெற வளர்ந்த விருக்ஷங்களாலும் அழகிய புஷ்பங்களைத்தரும் செடி கொடி களாலும் செழிப்புற்று விளங்கியது. பலஜாதிப் புள்ளினங் களும் மான் முதலிய மிருகங்களும் யாதொரு சஞ்சலமு மின்றி அங்கு வாழ்ந்துவந்தன. மரப்பொந்துகளிலுள்ள இறகு முளைக்காத கிளிப்பிள்ளைகளெல்லாம் ரிஷீஸ்வரர்க ளது இனிய வார்த்தையாகிய "ஸ்வாகதம்" என்பதையே பன்னிக்கொண்டிருந்தன. ஆண்டிருந்த பர்ணசாலைகளில் ஆகாயமளாவிப் பரந்துசெல்லும் வெண்புகை, தத்துவ குணம் வாய்ந்த முனி சிரேஷ்டர்கள் வாசம்செய்யும் இடம் அவ்வனம் என்பதை அறிவித்தது. மன்னனும் மந்திரியும் இவ்வனத்தினை அடைந்ததும் அதன் அழகைப் பலவாறு வர்ணித்துக்கொண்டே யாகம் நடைபெறும் சாலையை அணு

கிஞர்கள். யாகத்தை முடித்தபின் ரிஷீஸ்வரர்கள் ஆங்கமர்ந் திருப்பதை அரசன் கண்டு தவத்தாலும் குணத்தாலும் குலத்தாலும் சிறந்த வசிஷ்டரை முதன்மைப்படுத்தி "வசிஷ்டாதி மகரிஷிகளுக்கு நமஸ்காரம்" என்று கூறி வணங்கிப் பின் முனிவர்களது ஆசிகள்பெற்று தன் நாட் டடைந்தான்.

அச்சமயம் ஆண்டிருந்த பல முனிவர்களுள் கௌசி கரும் ஒருவர். அவர் க்ஷத்திரிய வம்மிசத்தி லுதித்து பெரும் தவம்புரிந்து ப்ரம்ஹரிஷி ஆனவர். தவத்திலும் குணத்தி லும் தனக்கு நிகரில்லாதவர். இம் முனிவருக்கும் வசிஷ்ட டருக்கும் முன்னுலேயே விரோதம் உண்டு. ஆதலின் அரசனுகிய சகுந்தன் சபையில் தவத்தில் முதன்மைபெற் றவரென்று கருதி வசிஷ்டரை வணங்கியதில் மிகுதியான கோபம் அவர் கொண்டார்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்றபடி இவருடைய அகத்திலிருந்த கோபத்தை முகம் தெற்றெனத் தெரிவித்தது.

அக்குறிப்பினை யறிந்த ஆங்கிருந்த நாரதமுனிவர் அதுவே தாம் கலகம் விளைத்தற்கு ஏற்ற தருணமென் றெண்ணி விசுவாமித்திரரின் அருகே சென்ருர். தன் முகம் செவக்கவும் உதடுகள் துடிக்கவும் கண்கள் கோவைப்பழம் போன்றிருக்கவும் விசுவாமித்திரர் யாதொன்றும் பேசாது வாளாவிருத்தமை கண்டு நாரதமுனி தமது கருத்து நிறை வேறுமென்று கருதி அகமகிழ்ந்தாராயினும் அம் மகிழ்ச்

கியை மறைத்து தம் திருமுகத்தில் ஓர் சிறிது தளர்ச்சி காட்டி "அரசனுயினும் அறிவீனன்தான்" என்று கூறினர்.

நாரதர் இவ்வாறு கூறவும் கோசிகர் கோபம் மிகவும் வளர்ந்தது. உடனே அவர் நாரதரை நோக்கி "முனிவரே! எனது மேன்மையை இன்னும் அவன் அறிந்தானில்லை போலிருக்கிறது" இருக்கட்டும். அவன் என்ன பாடுபடு கிருன் பாரும். அரிச்சந்திரனும், அவன் முதன்மைப்படுத்தி வணங்கிய அவ் வசிஷ்டனும் என்னிடம் பட்டபாட்டினை சகுந்தன் அறியான் போலும்" என்று கூறி தமது தாடியைத் தடவினர்.

உடனே நாரதர் "தாம் அவ்வாறு செய்வீரென்பது எனக்கு இப்பொழுதுதானு தெரியும்? ஆயினும் கேவலம் மாயை வசப்பட்ட அவனைக் கண்டு பரிதாபம் கொள்ள வேண்டியதை விட்டு கோபம் கொண்டீரே என்பதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்று கூறினர்.

இம் மொழிகளைக் கேட்கவும் கோசிகர் கோபம் முன்னிலும் பன்மடங்கு வளர்ந்தது. உடன் அவர் நாரதரை நோக்கி "என்ன அவ்வாறு கூறினீர்? அவனைத் தண்டியாது விடுதல் எனக் கழகில்லையென்றே நினைக்கின்றேன்" என்றூர்.

நாரதர்:—"ஆம் முற்றிலும் உண்மை. அவ்வாறு செய்ய வேண்டிய தவசியம்தான். ஆயினும் பிராம்ஹணராகிய நாம் அரசனுகிய அவனை எவ்விதத்தில் தண்டிக்க முடியும் என்ற சந்தேகம் தான்".

கோசிகர்:—"நாரதரே! ஏன் இவ்வாறு கூறினீர். சர்வ வல்லமை வாய்ந்த ஸ்ரீராகவனுடன் எனக்கிருக்கையில் எக்காரியமும் எனக்குப்பெரிதில்லை என்பதை மறந்தீரோ?"

நாரதர்:—"ஆம்! ஆம்! மறந்துவிட்டேன். உமக்கு முடியாத காரியம் ஒன்றுமில்லை என்பதை இப்பொழுது ஒப்புக்கொள்கிறேன். ஆயினும் சகுந்தன் ஸ்ரீராகவனுக்குகந்த பக்தனாயிற்றே".

கோசிகர்:—"யாராயின் என்ன? அதிருக்கட்டும் நாரதரே! அவனுக்கு எத்தகைய தண்டனை விதிக்கலாம்?" என்று சிறிது மகிழ்ச்சியுடன் கேட்டார்.

நாரதர்:—"அதற்கு யோசனையும் வேண்டுமோ? பிராமணரைப் பழித்த பாதகனுக்கு மரணமேயுற்ற தண்டனையாகும். நீர் இப்பொழுதே ஸ்ரீராமனிடம் சென்று, சகுந்தன் சிரம் நாளைக்காலையில் உமது காலில் விழும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அதுதான் உற்ற தண்டனையென என் புத்தியில் படுகிறது" என்றார்.

இம்மொழிகளைக் கேட்கவும் கோசிகர் மனம் குளிர்ந்தது. உடனே அவர் நாரதரை நோக்கி "நாரதரே! என்ன இருந்தாலும் நீர் பிரமபுத்திரரல்லவா? திரிலோகசஞ்சாரியல்லவா? மூவரும் களிக்க இன்னிசைபாடும் தத்துவஞானி என்ற பெயர் உமக்கே தகும். தகும். நீர் கூறியதே அப்பாதகனுக்கேற்ற தண்டனை. இதோ யான் ஸ்ரீராமனிடம் சென்று நீர் கூறியபடியே நடந்துகொள்கிறேன்" என்று

கூறி அகன்றார். நாரதரும் தம் தொழிலை இனிதுமுடிக்க அவ்விடத்தைவிட்டு நீங்கினர்.

## கோசிகர் ஸ்ரீராமனிடம் செல்லுதல்.

அயோத்தியென்பது கோசலம் என்ற வளம் நிறைந்த தேசத்தின் தலைநகரம். இதனை தசரதரது குமாரராகிய ஸ்ரீராமர் ஆட்சிபுரிந்து வந்தார். இப்பொழுதும் ஏதேனும் நல்ல ராஜாங்கத்தை ராமராஜ்யம் என்று கூறுவதை அனைவரும் அறிவார்.

மணிமயமான ஓர் சிங்காதனத்தில் தம் மனைவியுடனும் சகோதரருடனும் ஸ்ரீராமர் வீற்றிருந்தார். அச்சமயம் ஓர் சேவகன் வந்து அவரை வணங்கி கௌசிகமுனிவர் வாயிலில் வந்திருப்பதைக் கூறினன். உடன் ஸ்ரீராமர் ஆசனத்தினின்றும் இறங்கி தாயைக் காணச்செல்லும் கன்றே என்ன விரைந்து ஓடி முனிவரை எதிர்கொண்டு "பரமகுரு! இந்நிலத்தில் யான் இன்று செய்ததவம் வேறுயாரே புரிந்தார்?. தேவரீரது சேவடி தூசிபட்ட கிரகம் உடைய யான் தன்யனானேன்.

"நிலம் செய்தவம் என்றுணரின் அன்று நெடியோன்
நலம் செய்வினை உண்டெனினும் அன்று நகர்நீயாள்
வலம் செய்து வணங்க வெளிவந்த இதுமுந்தென்
குலம் செய்வினை என்றினிது கூறல் நலமன்றே"

என்று பல முகமன் மொழிந்தார். அன்றியும் ஸ்ரீராமர் கௌசிகரது மனவருத்தத்தை முகக்குறிப்பால் உணர்ந்து "சுவாமி தேவரீரது மனத்தை ஏதோ பெருங்கவலை ஒன்று பிடித்திருப்பதாய் அறிகிறேன். தமது அருமைச் சிடனு

கிய யான் அரசாண்டுவருகையில் எத்தகைய குறையும் தமக்கு நிகழ்ந்திருக்கக் காரணமில்லையே? தமது திருமுக மண்டலம் உள்ளக் கவலையைக் காட்டி என் மனதைப் பெரிதும் வருத்துகின்றது. என் செய்வேன்?; தமக்குத் துயரிழைத்த பாவி எவரென்றறிந்தால் அவரை சின்னபின்னப் படுத்துவேன்'' என்றதும் விசுவாமித்திரர் நிகழ்ந்தவற்றை முழுதும் கூறினர். அச்சமயம் நாரதரும் அங்கு சேர்ந்தார். வந்த நாரதரை ஸ்ரீ ராமர் மகிழ்வுடன் வரவேற்று ஆசனமளித்து அமரச் செய்தார். பின் நாரதர் ஸ்ரீ ராமரை நோக்கி, "அப்பா! ஸ்ரீ ராகவா! உனது பரம பக்தனாகிய காசிதேசத்தரசன் சகுந்தன் இவ்விசுவாமித்திரர் இருக்கும்பொழுது வசிஷ்டரை முதன்மைப் படுத்திய குற்றத்திற்காக அவனுக்கு யாது தண்டனைவிதிப்பது என்பது எனக்குப் புலப்பட்டிலது. மனுதர்ம சாஸ்திரத்தில் இது என்ன குறறத்தின் பாற்படும் என்பது எனக்கே தெரியவில்லை. அநீதியாய் பக்தரைத் தண்டிப்பது தாட்கையை மாய்க்கமாட்டேனென்று ஆதியில் இந்த விசுவாமித்திரரிடமே கூறிய உனக்கு ஏற்றதாயென்று யோசித்துப் பார்'' என்று கூறினர்.

அவ்வளவு செய்கைக்கும் நாரதரே காரணம் என்றதை ஸ்ரீராமர் உணர்ந்து கொண்டார். பின் அவர் நாரதரை நோக்கி"சுவாமி! தர்மம் அதர்மம் என்றதைச் சிந்திக்க இடமில்லை. எமது குருவிடம் அவர் விருப்பத்தை நிறைவேற்றுவதாகக் கூறி அதனின்றும் மாறுவது தசரத புதல்வனாகிய எனக்கு ஏற்றதல்ல'' என்று கூறி விசுவாமித்திரரை நோக்கி "சுவாமி அச்சகுந்தனுக்கு எத்தயை தண்

டனே விதிக்க வேண்டு"மென்று வினவிப் பணிந்து நின்றார். கோசிகரும் மறுநாட்காலை சகுந்தனது சிரம் தனது காலில் விழுதலையே கோறி நின்றார். உடன் ஸ்ரீராமர் தமது தம்பியாகிய சத்துருக்கனனை நோக்கி, காசிவேந்தனது சிரத்தைக் கொண்டுவருமாறு ஆணையிட்டார். சத்துருக்கனனும் அங்ஙனம் செய்வதாய்க்கூறி வணங்கி அகன்றான்.

## சகுந்தனுக்கு நாரதர் யுக்திகூறுதல்.

காசியில் தனது அரண்மனையில் மந்திரிமாருடனும் மற்றும் பலருடனும் உரையாடிக்கொண்டிருந்தான் சகுந்தன். அச்சமயம் திடீரென நாரதமுனிவர் ஆண்டெய்தினர். அவரது முகத்தை நோக்கிய அரசன் மிகஅவசரமாய்த் தன்னை அவர்தேடி வந்ததை அறிந்துகொண்டான். பின் அரசன் அவருக்கு முறையேபூஜைகள் புரிந்துவந்த காரணம் யாதெனவினவலும் முனிவரேறாகிய நாரதர் அவனிடம் கோசிகர் அரசன் மீது கொண்ட கோபத்தையும் ஸ்ரீராமர் அவரது விருப்பத்திற்கிணங்கி சகுந்தனது தலையைக் கொணருமாறு சத்துருக்கனனுக்கு ஆணையிட்டதையும் பரக்க எடுத்துரைத்தார். உடன் சகுந்தன் முனிவரைவணங்கி, "சுவாமி பெரியார்கோபத்திற்குப் பாத்திரனான யான் இனி உலகில் வாழ்வதினும் எம்பெருமானான ஸ்ரீராமரது தம்பியார் திருக்கைப் பாணத்தால் மடிதலே சாலவும் சிறந்ததாகும்" என்று கூறி நின்றான். பின் நாரதர் அவனை நோக்கி, "அரசே! புலவர்கள் அரசரை உயிராகவும், பிரஜைகளை உடம்பாகவும் கூறுவர். நீ அநியாயமாக மடிந்தால் உன் செங்கோலை நோக்கி வாழும் குடிகள் கதறுவார். அரச

னின்றி உனது ராஜ்யம் அழியும். ஆதலின் உன் பொருட்டு ஆதலின் உன்பொருட்டு அல்லாவிடினும் உன் குடிகள் பொருட்டு நீ உயிர் வாழவேண்டியது அவசியமாகும். அதற் குற்ற வழியைத் தேடுவதே சாலவும் சிறந்தது என என் புத்தியில் படுகிறது'' எனலும் அரசனும் மீண்டும் அவரை வணங்கி, ''பெரியீர் ராமபாரதிபான, நான் இனி உயிர் வாழ்தலெங்கனம்? பஞ்ச பூத பலம் படைத்த வாலியையும் திக்விஜயம் செய்த இராவணனையும் கொன்ற அவருடைய பாணத்தின் முன் அற்பனாகிய யான் எம்மட்டு?'' என்று கூறினான். பின்னும் நாரதர் அவனை நோக்கி, ''சகுந்தா! நீ பிழைக்க ஓர் வழியுளது. இதோ மேற்கு முகமாய் ஒரு காதம் நடந்தபின் ஓர் கானகம் காண்பாய். அங்கு ஓர் குழி தோண்டி தீவளர்த்து அதனை நீ மும்முறைவலம் வரவேண் டும். அவ்வாறு வரும்பொழுது 'அநியாயமாய் அக்னிக்கு இறையாகும் என்னைக்காப்பார் ஒருவருமில்லையோ' என்று ஓலமிடின் உன்முன்தேவி ஒருத்தி தோன்றுவாள். உடனே அவள் காலைப்பற்றிக்கொள். உனக்கு அபயம் ஈவாள். பின் அங்கு நான் வந்துசேருகிறேன். சிறிதும்தாமதியாமல் நீ புறப்படவேண்டும்'' என்றுகூறினர். சகுந்தனும் நாரதரது கருத்தின் படியே தன் இராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்பு வித்துவிட்டு மேற்குமுகமாய் காடு நோக்கிப்புறப்பட்டான். நாரதரும் அவ்விடத்தைவிட்டு நீங்கினர்.

## சகுந்தன் அஞ்சனையிடம் அபயம் பெறல்.

சகுந்தன் நாரதர் குறித்த கானகம் வந்து சேர்ந்ததும் அவர் கூறியவாறே அங்குத்தீவளர்த்தான் அருகில் உள்ள

காய்ந்த பல மரங்களை வெட்டி அத்தீயில் வீழ்த்தினன். தீயும் வானளாவி வளர்ந்தது. அச்சமயம் சகுந்தன் ராமா பராதியாய் தான் உலகில் வாழ்வதிலும் தீயில் விழுந்து மடிதலே சாலச் சிறந்த தெனக்கதறினன். ஆயினும் முனிவர் கூற்றிற்குமாறுபடக் கருதாது அதனை வலம் வந்தான். வலம் வருகையில் அவர் கூறியவாறே "அநியாயமாய் நெருப்பில் வீழ்ந்து மடியும் என்னை ஆதரிப்பார் எவருமில்லையா?" யென்று ஓல மிட்டான்.

அவ்வாறு அவன் ஓலமிட்ட மொழிகள் அவ்வனத்தில் வாழ்ந்து வந்த அஞ்சனை யென்னும் நாமம் வாய்ந்த தேவியின் செவிகளின் விழுந்தன. அவள் மிகுதியர்ன வல்லமை வாய்ந்த அனுமானின் தாயார். சகுந்தன் மொழிகள் தன் காதிற் புகுதலும் அவவம்மணி இடி யொலி கேட்ட சர்ப்பம் போல் நடுநடுங்கி விரைந்தோடி அவன் முன் போந்து அவனது துயரை நிக்குவதாய்க்கூறி அவனுக்கு அபயமீந்தாள்.

அஞ்சனை யிடம் அபயம் பெற்ற வேந்தனும் தன்னிடம் நாரதர் மொழிந்த படியே அவளது பாதங்களிற் பணிந்து எழும் சமயம் நாரதரும் அங்குப் போந்தனர். உடன் அவர் சகுந்தனை நோக்கி "அப்பா! உலகம் புகழும் இத்தேவியிடம் அபயம் பெற்ற உனக்கு இனியாதும் குறையில்லை. கவலைப் படாதே" எனகூறித்தேற்றினர். மாமுனி வரவுணர்ந்த அஞ்சனையும் அவரைப்பணிந்து முகமன் கூறினள். முனிவரும் அவளை வாழ்த்தி தன் வழியிற் சென்று கொண்டிருக்கையில் மன்னன் அலறிய குரலைக் கேட்டு வந்ததாகக்கூறி சகுந்தன் இராம பாரதியான விதத்தையும் கூறினர். ஸ்ரீராம தாச

னாகிய ஆஞ்சநேயனது மாதவாகிய அத்தேவி ராமாபராதி யெனும் மொழிகள் தன் செவியில் சாருமுன்னரே ராமா ராமா என்று கூறித் தனது செவிகளிரண்டையும் புதைத்துப் பின் நாரதரை நோக்கி "முனிசிரேஷ்டரே இதென்ன இராமாபராதியை யான் எவ்வண்ணம் காக்கவல்லேன்.—அதற்கு உபாயம் தாமே அருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். உடனேநாரதர் அவளை நோக்கி "அஞ்சனா! வல்லமை வாய்ந்த புதல்வர்களைப் பயந்தவர்களுக்கு அரிய தோர் விஷயமும் உண்டோ? உனது குமாரனாகிய ஆஞ்சநேயன் மகா வல்லவன். இராமா பராதியாகிய இம்மன்னனைக் காக்கும் திறமை அவனுக்குண்டு" எனலும் அஞ்சனை மிகுதியான துயருடன் "நாரதரே! என்ன கூறினீர்? இராமதாசனாகிய என் குழந்தையா இராமா பராதியைக் காக்கவல்லான். இச் செய்தியை அறிந்த வுடனேயே அவன் மிகப்பதறுவனே என்செய்வேன்" என்றாள்.

அப்படியாயின் காக்கமுடியாது என்று கூறிவிடு. அபயமளித்தவள் நீ.உன்னிடம் அபயம் பெற்றவன் இவன். எனக்கென்ன? யான் இதோசெல்கிறேன்" என்று கூறி விட்டு நாரதர் அவ்விடத்தை விட்டுப் புரப்பட்டார். அச்சமயம் அஞ்சனை அவரை வணங்கித்தடுத்து, "சுவாமி யான் செய்யவேண்டியது என்னவென அருள் புரிவீரேல் அவ்வாறே செய்வேன்"எனலும் நாரதர் அவளை நோக்கி, "அஞ்சனா! நீமிகுதியான சோகத்தை முகத்திற் காட்டி உன்மைந்தனை அவன் வருவான். நான் கூறியதொன்றனை நீ புரியவேண்டும் என்று கேள். அப்படியே செய்வதாய் அவன் வாக்களித்த பின் சமாசாரத்தைக்கூறு. பின்யான் பார்த்துக் கொள்

வேன்'' என்றார். அஞ்சனையும் தன் வாக்கை உண்மைப்ப டுத்த நினைத்து எல்லையற்ற சோகத்தோடும் ஓர் புறம் அமர்ந் தாள் அச்சமயம் நாரதர் சகுந்தனை மறைவிடத்தில் பதுங் கிக்கொள்ளச் செய்து தாமும் கொஞ்சம் மறைந்து நின்றார்.

அஞ்சனை பின்வாருமாறு தன் புதல்வனை எண்ணிக் கதறினாள். "என் அருமைக்கண்மணி! என்செய்வேன். என் துயரை ஆற்ற இக்கணம் வாராயோ'' வென்று அஞ்சனை கதறிய குரல் அநுமார் காதில் விழுதலும் அவர் மிகநடுங்கி விரைந்து ஓடி வந்து தாயைப் பணிந்தார். தன்னை வந்து பணிந்த தன் அருமை மைந்தனைத் தழுவி உச்சி முகர்ந்து பின் அன்புடனும் மிகுதியான துக்கத்துடனும் அவரை நோக்கினாள். தம்தாயின் முகத்தில் பெரிதும் வாட்டம் கண்ட அநுமார் அவரை நோக்கி "தாயே தாம் இவ்வளவு வருந்தும்படியான துன்பம் யாது விளைந்தது. ஸ்ரீராமனது நாமம் இவ்வுலகில் உள்ளவரை நமக்கு தீங்கிழைக்க தேவ ராலும் இயலாது. இது காறும் இல்லாது இன்று தமது திரு முகம் வாடியகாரணம் யாது?'' எனப்பரிந்து வினவினார். அப் பொழுது அஞ்சனை அவரை நோக்கி "குழந்தாய்! அத்து யரம் எனது பேதமையாலும் முன் யோசனை இல்லமை யினாலும் விளைந்ததேயன்றி வேறல்ல. அது உன்னால் நீக்கப் படுவது மில்லை'' என்று கூறி மீண்டும் கண்ணீர் வடித்தாள். அநுமார் உடன் தமது தாயின் திருமுகம் துடைத்து மீண் டும் "அம்மையே! இவ்வுலகில் என்னாலியலாதகாரிய மொன்றுமில்லை யென்றே கருதுகின்றேன். அத்துயர் யாதெனத் தயவு கூர்ந்தருள் வீரேல் அதனைக் கட்டாயம் தீர்த்து வைப்பேன்'' என்றார்.

அதுகாறும் ஒளிந்து கொண்டிருந்த நாரதர் அச்சமயம் வெளிவந்து அஞ்சனையை நோக்கி "என் அம்மா? எக்காரியத்தையும், முடிக்கும் ஆற்றலுடைய உனது குமாரிடம் உன்குறையை கூற யாது தடை" எனலும் அஞ்சனை இராமாபராதியாகிய சகுந்தனுக்குத் தான் அபயமீந்ததை உரைத்தாள். அம்மொழிகள் தன்செவிகளில் சார்தலும் அநுமார்கொண்ட சோகத்திற்கும் கோபத்திற்கும் எல்லையில்லை. செய்வதென்னெனத் தோன்றாது கரங்களை ஓங்கித் தரையிலடித்தார், எழுந்தார், விழுந்தார், விம்மினர், வியர்த்தார். யாவும் நாரதரது செயலா யிருக்கலாமென்று கருதி அவரை மிகுதியான கோபத்துடன் உற்றுநோக்கி பற்களை நெறு நெறென்று கடித்தார். அவரது கோபாவேசத்தைக் கண்ட நாரதரும் நடுங்கி மெதுவாய் ஓர் புறம் நகர்ந்தார்.

அப்பொழுது அநுமார் அஞ்சனையை நோக்கித் "தாயே! இராமாபராதிக்கு அபய மளிக்க உமது மனம் எவ்வாறு துணிந்தது. ஐயோ யான் எவ்வாறு அவனைக்காப்பேன்? என்செய்வேன்?" என வருந்த அஞ்சனை "அப்பா! முன் யோசனையின்றி யான் அளித்த மொழிகளில் சிக்கிக் கொண்டேன். அதோ இருக்கும் நாரத ரருளிருந்தால் நமக்கு எக்காரியமும் கைகூடும். செய்யவேண்டியது யாதென அவரைக்கேள்?" என்றாள்.

உடனே ஆஞ்சநேயர் அஃதே தக்கதெனக் கொண்டு அருகில் பயந்தவர்போல் நின்ற நாரதரைக் கரங்களைப் பிடித்து தன்னருகழைத்து அவரை வணங்கித் தான் அவ்வாறு செய்வதற்கு ஒரு உபாயம் கூறுமாறு அவரைப்

பிரார்த்தித்தார். நாரதரும் அநுமாரை நோக்கி "ஆஞ்சநேயா! யான் இதற்கென வந்தவனல்லேன். கானகமார்க்கமாய் யான் சென்றுகொண்டிருக்கையில் சகுந்தன்என்னும் மன்னன் ஓலமிட்ட மொழிகளைக்கேட்டு ஓடிவந்தேன். அங்கு அவனுக்கு உன்னால் அபயமளிக்கவும் காணப்பெற்றேன். எல்லாம் வல்ல உனக்குத் தெரியாத யோசனையுமுண்டோ" எனவும் அநுமார் நாரதரை வணங்கி "திரிலோக சஞ்சாரியே! முக்கடவுளரும் களிக்கும் வண்ணம் இசைபாடுபவரே! தாமே எனக்கு ஓர் உபாயம் அருள்புரிய வேண்டு" மென்று வேண்டினர். உடனே நாரதர் அநுமாரைப்பார்த்து "மாருதி! ஈண்டே உன்வாலினால் ஓர் கோட்டை கட்டி அக்கோட்டைக்குள்ளாக சகுந்தன் என்னும் உத்தமனை வைத்துக்கொண்டு நன்மைக்காதரவான ராமநாமத்தையே எண்ணிக்கொண்டிருப்பாய். எத்தகைய இடையூறுகள் நேரினும் நீ எழலாகாது. யான்வந்து உன்னை வேண்டியபின் எழக்கடவாய்!" எனவும், ஆஞ்சநேயர் அதற்கிசைந்து, மறைவிலிருந்து வந்து தன்னை வணங்கிய சகுந்தனை ஆசிர்வதித்து, வாலினாலவனைச் சூழ ஓர் கோட்டை கட்டி தானும் அதன்மீதமர்ந்து ராமநாமத்தையே கானம் செய்து கொண்டிருந்தார். நாரதரும் தமதுகாரியத்தை முடிக்கக் கருதி அவ்விடத்தினின்றும் அகன்றார்.

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தீயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராமவென்றிரண்டெழுத்தினால்."

---

## துன்பமா யின்பம் பயத்தல்.

இராமரால் சகுந்தனது சிரத்தைக் கொணருமாறு ஆஞ்ஞாபிக்கப்பெற்ற சத்ருக்கனன் காற்றினும் கடுகிக்காசி வேந்தனது அரண்மனை எய்தினன். அங்கு அரசனைக் காணப் பெற்றிலனாய், சிலர் மூலம் அவன் கானகம் ஏகியதை உணர்ந்து அக்கானகத்தை நோக்கிவரும் வழியில் அநுமாரது இராமநாம கானம் செவியுற்று அதனின்பத்தை பெரிதும் வியந்துகொண்டே வேறொன்று மிழைக்கத் தோன்றாமல் அங்கேயே கரம் கூப்பி நின்று கொண்டிருந்தான்.

சகுந்தனை மாய்க்கச் சென்ற தன் தம்பி திரும்பாததை எண்ணி இராமர் தமக்கு அடுத்த சகோதரனாய பரதாழ்வானை அத்தொழிலை இழைக்கும்படி ஆஞ்ஞாபித்து அனுப்பினார். பரதனும் தமையனை வணங்கி அகன்றான். சத்ருக்கனனைப் போலவே காசிவேந்தனது அரண்மனை அடைந்து ஆண்டுள்ளோர் மூலம் அரசன் கானகம் அடைந்ததை அறிந்து கானகம் நோக்கி நடந்து வந்த பரதாழ்வான் சத்ருக்கனன் கரம் குவித்து ராம கானம் எழுந்த திசைநோக்கி நின்றதைக் கண்டு அவனை நோக்கி, "தம்பி நமது தமையனது ஆக்ஞையை நிறைவேற்றாது இங்கு நின்று கொண்டிருக்கும் காரணம் என்?" என்று வினவலும் சத்ருக்கனன் பரதனைப் பார்த்து "அண்ணா! அச்சகுந்தன் சர்வலோக ரக்ஷகரான நம் அண்ணனிடத்து அளவு கடந்த பக்தி பூண்டவனாயிருக்கவேண்டும். அதோகேளும் ஸ்ரீராம நாமத்தை; எவ்வளவு இனிமையாக கானம் செய்கின்றான். அப்பேர்ப்பட்ட பாகவதனை நம்மால் மாய்க்கத்தான் முடியுமா அன்றி அவ்வாறு இழைத்தல் தான் தர்மமா?" என்று கூறி மீண்டும் அத்திசை நோக்கி கைகூப்பி நின்றான்.

இனிமையான ராம நாம கானத்தைச் செவியுற்ற பரதாழ்வானும் பரவசமாயினன். உடனே அந் நாமத்தைப் புகன்றபரம பக்தனைத் தரிசிக்கும் ஆவலுடன் தாய் நாடிச் செல்லும் கன்றே போல் விரைந்து ஒடினன். ஆண்டு ஆஞ்சநேயர் தம் வாலால் கோட்டைகட்டி அதன்மீது ஒளியோடு கூடி அமர்ந்திருந்ததைப் பலவாறு வியந்து அவரை மும் முறை வலம் வந்து சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு எழுந்து செவி சாய்த்து கை கூப்பி நின்றான்.

பார்த்தார் இராமர்? சென்ற பரதனும் மீளாமை அவருக்குப்பெரிதும் கவலையை விளைவித்தது. தமது வாக்கைப் பரிபாலனம் செய்யவேண்டும் என்ற திடசித்தமும் தம்பிமார் மீளாமையும் அவருக்குப்பெரிதும் வருத்தத்தைக் கொடுத்தன. என்செய்வார்.! உடனே எதையும் செய்ய வல்லனாகிய இளையாழ்வாராகிய இலக்குமணனை தம் அருகழைத்து, "தம்பி! பரதனும் சத்ருக்கனனும் இன்னும் மீளாதிருப்பது என் மனதை வருத்துகின்றது. அவர்களைப் போல் நீயும் தாமதம் செய்யாமல் உடனே சகுந்தனது சிரத்தைக் கொண்டு வருக. பொழுதுவிடியும் நேரமும் ஆயிற்று. கோசிகருக்கு நான் அளித்தவாக்கு கெடாமல், நிலைபெறும் வழியைத் தேடுவது உன் கடனாகும்" என்று கூறுதலும் இலக்குமணன் வணங்கிவிடை பெற்று அகன்றான்.

சென்ற இலக்குமணன் வழியில் நின்ற சத்ருக்கனனையும் கூடகவனித்திலன். அண்ணனின் மொழிப்படி விரைந்தேகி அனுமான் வால் கோட்டை கட்டி அமர்ந்திருப்பதை

யும் தன் தமயனுகிய பரதன் கை கூப்பி அருகில் தொழுது நிற்பதையும் கண்டு ஆச்சரிய மடைந்தான். அச்சமயம் அருகிருந்த நாரதர் மூலம் அனுமான் சகுந்தனைக் காத்திருப்பதை அறிந்த இலக்குமணன் அனுமானைநோக்கி, சகுந்தனை வெளியேற்றுமாறு பல இன் மொழிகளால் வேண்டினன். இராம நாமத்தில் ஈடுபட்டிருந்த அனுமானது செவிகளில் இலக்குமணனது மொழிகள் விழுந்தில. பொழுது புலரும் நேரமாய் விட்டதால் தன் அண்ணன் வாக்கை நிறை வேற்ற விரும்பிய இலக்குமணன் தன் மொழிகளை கவனியாத அனுமார் மீது கோபங்கொண்டு பல பாணங்களை அவர் மீது ஏவினுன். அவன் ஏவியபாணங்கள் யாவும் அனுமானை வலம் வந்துவணங்கினவே யன்றி அவருக்குச் சிறிதும் தீங்கிழைத்தில. இலக்குமணன் கை சோர்ந்து செய்வது யாதெனத் தெரியாமல் திகைத்து நின்றுன்.

பொழுது புலரும் நேரமாயும் தன் தம்பியர் மூவரும் திரும்பாமை ஸ்ரீராமருக்கு மிகுதியும் கோபத்தை விளைத்தது. உடன் இராமர் ஆண்சிங்கம் போன்று தம் ஆசனத்திலிருந்து எழுந்து சகுந்தனை நாடி அவன் இருக்குமிடத்தை அடைந்தார். அங்கு கைசோர்ந்து நிற்கும் இலக்குமணன் இராமரைப்பணிந்து நடந்தவை யாவற்றையும் நவின்றுன். அம்மொழிகளால் பெரிதும் கோபங்கொண்ட இராமர் தமது பாணத்தை அனுமார் மீது ஏவ நினைத்து எடுத்த எல்லை நாரதர் விரைந்து அங்கேகி அவரை நோக்கி "இராமா! என்ன காரியம் செய்ய நினைத்தனை. உனது உத்தமதாசனுகிய அனுமான்மீது உனது சுடுசரம் ஏவநினைத்தனை?" என்ன, இராமர் நார

தரை நோக்கி, "கூறிய வாக்கிற் பிறழாமை உத்தம சக்கர வர்த்தி தசரத மைந்தனுகிய என் கடனல்லவா?" என்று விடையளித்தார். உடனே நாரதர் நகைத்து "இராம! இச் செயலிழைக்குமாறு கூறிய கோசிகமுனியை இன்னே கொணர்க. உனது வாக்கை நிறைவேற்றி வைப்போம்" என்ருர். உடன் இராமரது குறிப்பின்படி இலக்குமணன் முனிவரை அழைத்துவர அகன்ருன்.

உடனே நாரதர் அனுமாரிடம் சென்று அவரது செவி களில் மெதுவாக சகுந்தனை வெளியேற்றுமாறு கூற, அனு மானும் எழுந்து சகுந்தனை வெளியேற்றி இராமரைப் பணிந்து நின்ருர். உடனே சகுந்தன் வெளிவந்து இரா மரையும் நாரதரையும் பணிந்து நின்ருன். சகுந்தனை நார தர் அவனைப் "பார்த்துவரும் கோசிகர் காலில் விழுந்து வணங்கு" என்று ஆக்ஞாபித்தார்.

சிறிது நேரத்தில் தன் கருத்து நிறைவேறியிருக்கும் எனக்கருதி மகிழ்ச்சியுடன் வந்த கோசிகரை, சகுந்தன் தலைகுனிந்து சென்று வணங்கினுன். அவனை இன்னுனென் றுணராத கோசிகரும் நீடூழி வாழுமாறு அவனை வாழ்த்தி ஞர். சகுந்தனும் எழுந்து கைகட்டி வாய்புதைத்து நின் ருன். தாம் வாழ்த்தியது தமக்கு அபராதியாகிய சகுந் தனே என்று அறிந்த கோசிகர் திகைத்து நின்ருர்.

அச்சமயம் நாரதர் கௌசிகரை அடைந்து "சுவாமி! நீர் கோரியது சகுந்தனது சிரம் தமது காலில் விழவேண்டு மென்பதே அல்லவா? அவன் தம்மைப்பணிந்த காலத்தில் அவ்வாறே நிகழ்ந்துவிட்டது. இனி தாம் திருப்தியடைக.

தாம் அவனை வாழ்த்தியவாறு அவனும் நீடூழிகாலம் வாழக் கடவன்'' என்று கூறி இராமரை நோக்கி, ''இராமா! உன் வாக்கும் மெய்த்தது. யான் இழைத்த கலகமும் இனிது முடிந்தது'' என்று கூறினர். அனைவரும் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. பெரியோரது ஆசிபெற்ற சகுந்தனும் ஸ்ரீராமபக்தனாய் நெடுங்காலம் காசிராஜ்யத்தை ஆண்டு வந்தான். இராமரும் தமது வாக்கு நிறைவேறியமைக்கு மகிழ்ந்தார். அவரது தம்பியரும் மகிழ்ந்தனர். அனைவரும் மகிழ்ச்சியுடன் திரும்பினர்.

உ

சிவமயம்.

# அங்குலன்.

நீர்வளம் நிலவளம் குடிவளம் முதலிய பலவளங்களும் நிறைந்து, பூமகள் நாமகள் இருவரும் ஒத்திருந்து நாளும் சிறப்புற்றோங்கிய சாகரபுரம் என்று ஓர் நகரமுண்டு அந் நகரைச்சார்ந்த காட்டில் அங்குலன் என்னும் ஒரு வேடன் தன் மனைவி மக்களுடன் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தான்.

அவ் வங்குலன் பச்சை மாமிசங்களைத் தின்றே வயிறு வளர்த்து வந்தமையால், அவன் வாயினின்று 'புன்புலால்' நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. சதாமிருகங்களையும், பக்ஷி ஜாதிகளையும் கொல்வதே அவனது தொழிலாக இருந்த தால், அவன் மனத்தில் இரக்கம் எள்ளளவும் இல்லை; எப் பொழுதும் விரிந்துகிடக்கும் செம்மைநிறம் படர்ந்த மயி ருடையவன்; தீப்பொறிபறக்க விழிக்கும் கண்ணுடைய வன்; இருட்டில் கண்டவர்கள் பூதமோ பிசாசோ என்று அஞ்சத்தக்க சரீரமுடையவன்; கொன்ற மிருகங்களின் ரத்தம் உலராத ஈட்டி சொருகிய தோற்கச்சை அறையிற் கட்டியவன்; இவனுக்கு ஆடையாக இருந்தவை இலைகளும், மரப்பட்டைகளுமே. கால்களில் நாகரீகமின்றித் தைக்கப் பட்ட செருப்பு அணிந்தவன். இவன் கொலைத்தொழிலே

பூண்டவன் என்பதற்கறிகுறியாக, அவன் தோளில் வில்லும், அம்புக்கூடும் எப்பொழுதும் தொங்கிக்கொண்டிருந்தன. கண்ட மிருகங்களைப் பிடிக்கக்கூடிய இரண்டு நாய்கள் எப்பொழுதும் அவனைச் சுற்றிக்கொண்டேயிருந்தன.

இவனது மனைவிமக்களும் மாமிசபக்ஷிணிகளாயிருந்ததால், இவர்கள் வேட்டையாடி மிருகங்களை வதைத்து அவற்றின் ஊனையுண்டுவருவது வழக்கம். அவ்வாறே, ஒரு நாள் அங்குலன் இரைதேடிவரும் நிமித்தம் வேட்டையாட நடுக்காட்டையடைந்தான். அக்காட்டில் பலவிருக்ஷங்களும் நிறைந்து ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருந்தன. ஆகையால் சூரியனது செங்கிரணங்கள் அக்காட்டினுள் நுழைய இயலவில்லை. இம்மரங்களிற் கூடுகட்டி, குயில் கிள்ளை மைனமுதலிய பலஜாதிப் புள்ளினங்களும் வாழ்ந்து வந்தன. எங்கும் மல்லிகை முல்லை ரோஜா முதலிய மலர் தரு செடிகள், மலர்கள் மலிந்து பறிப்பாரின்றி விளங்கின. அக்காட்டிலிருந்த பலாமரங்களினின்று கீழே வீழ்ந்தகனிகள் உடைந்து மிகுதியாகத் தேனைப்பெருக்கிக் கொண்டிருந்தன. அம்மதுவை உண்பதற்கென்று பலவண்டுகள்வந்து ரீங்காரம் செய்துகொண்டிருந்தன.

மனுஷ்ய சஞ்சாரமற்று இக்காடு இருந்ததனால் எங்கும் கற்களும் முட்களும் நிரம்பியிருந்தன. ஓர்பால் ஆண்சிங்கமொன்றால் மத்தகம் பிளக்கப்பட்டு விழுந்து கிடக்கும் மதகரியினுடலிருக்கும். ஒரு பக்கத்தினின்று சிங்கம், வேங்கை, காட்டுப்பன்றி முதலிய துஷ்டமிருகங்களின் கொடுங்குரல் கேட்கும். மற்றோர்பால் மான்களைப் புலிகள் துரத்திப் போதலும், இன்னொருபால் பெண்யானை பிளிறுவதுமாக

இருக்கும். கொடியவிஷம் நிரம்பிய பற்களையுடைய நாகங்கள் தத்தம்படங்களை விரித்து எங்கும் ஆடிக்கொண்டிருக்கும். இன்னும் இக்காடு இவைபோன்ற பல கொடுங்காக்ஷிகள் நிரம்பியனவாயிருந்தது.

இத்தகைய பயங்கரமான காட்டில் வேட்டையாடப் புகுந்த அங்குலன் தக்க இடங்கண்டு தான் கொணர்ந்த வலைகளை நெருக்கிவிரித்து, பறவைகளையும், மிருகங்களையும் கலைக்க நாற்புறங்களிலும் கவண்கற்களை வீசிக்கொண்டிருந்தான்.

இவ்வாறு நெடுநேரம் இவன் பலதிசைகளிலும் கற்களைவீசிக் கடைசியிற் கையோய்ந்து தரையிலுட்கார்ந்தான். இவன் ஏவிய கவண்கற்கள் தம்மீதுவந்து தாக்கியதால், பல மிருகங்களும், பறவைகளும் நாற்புறங்களினும் சிதறியோடினவாயினும், இவன் விரித்தவலையில் ஒன்றும் சிக்கவில்லை.

இச்சமயம் கதிரவனும் மேலைக்கடலிற் சாய்ந்தான். வேடனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. வீட்டில் மனைவியும் மக்களும் பசிப்பிணியால் வருந்துவரே என்பதையெண்ணிப் பெருந்துயரடைந்தான். "ஊனின்றி வீட்டிற்குச் செல்லின் வேறுணவு ஒன்றும் வீட்டிவில்லாமையால், அவர்கள் பசியை எவ்வாறு தீர்ப்பது? ஓர்வழியும் இல்லை; ஆகையால் இன்றிரவை இங்கேயேகழித்துவிட்டு நாளைக்காலை ஏதாவதுகொண்டு வீடு அடைதலே உத்தமம்" என்றெண்ணி அவ்வாறே செய்யத் துணிந்தான்.

துணிந்தபின் அவன் "நான் இங்கே நின்று கொண்டிருந்தால் இவ்வழியாய்வரும் விலங்குகள் பயந்தோடுமே.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
184408
சென்னை

பின் எவ்வாறு நானவற்றின்மீது என் பாணங்களை ஏவுவது? அது முடியாது எனவே நான் எங்கேனும் மறைந்திருத்தல் வேண்டும்'' என்றெண்ணி நாற்புறமும் சுற்றிப்பார்த்தான்.

பார்த்தவன் மனம் பரவசமடைய அங்கு வில்வமரம் ஒன்று இருந்தது. அது இலைகளடர்ந்ததாயிருந்தமையின் அதுவே மறைந்திருத்தற் கேற்றவிடமென்றெண்ணி, அதன் மீதேறி மறைந்தான். மறைந்தவன் தான் அங்கு வரும் மிருகங்களைக் காணமுடியாதவாறு மரத்தினிலைகள் அடர்த்தியாயிருந்து மறைத்தது கண்டு, தன் கைகளினால், அவ்விலைகளைக்கொய்து கீழே தள்ளினான்.

இவ்வாறு இவன் கொய்து தள்ளிய இலைகள்யாவும், இவனது பூர்வஜென்ம நல்வினைப்பயனால் அம்மரத்தினடியிலிருந்த சிவலிங்கத்தின்மீது விழுந்தன. தற்செயலாய் அன்றிரவு சிவராத்திரியாயுமிருந்தது.

அங்குலன் இவ்வாறு தன் முன்வரும் மிருகங்களை மறைத்துக்கொண்டு இருந்த இலைகளை யெல்லாம் கொய்து தள்ளுவதற்குள் பொழுதும் விடிந்துவிட்டது. வேடனைப் பீடித்திருந்த பாவங்கள் எல்லாம் ஒழிந்ததுபோலவே அன்றிரவும் கழிந்தது. உலகத்தாரனைவரும் சந்தோஷிக்கவும், தாமரைகள் தன் வரவுகண்டு மலரவும், கதிரவன் உதயகிரியின்மீது வந்து தோன்றினான். பலபக்ஷி ஜாதிகளும் கல்லென்று சப்தித்துக் கொண்டிருந்தன. இளந்தென்றற் காற்றும் வீசிற்று. வேடனும் மறைத்த இலைகளை யெல்லாம் கொய்து தள்ளியபின், தன் கையிலிருந்த வில்லில் நாணேற்றி

வரும் விலங்குகளை மாய்ப்பதற்குத் தயாராயிருந்தான். நிற்க,

காலை வீட்டினின்று வேட்டையாட வெளிச்சென்ற அங்குலன் இரவுவரை வாராதிருக்கவே, அவனது மனைவி பலவிதமாய் எண்ணிக் கதறியழ ஆரம்பித்தாள்.

"பேதைப் பருவத்தே வந்தென்னைக் கைப்பிடித்தாய்
ஈதித்துணை நாளும் என்னைப் பிரிந்தறியாய்
காதற்கணவா இக்கங்குலிடை மீளாமல்
ஏதுற்றனையிடையூறே தென்றறியேனே"

"சாயும் சிலையிற் சரங்கொளுவு முன்னெதிர்ந்து
சீயம் கொலைபுரியத் தோள்வலிகள் தீர்ந்தனையோ
காயும் சினவா யரவங்கடித் தொறுக்க
பாயும் புலிபோல் வாயவ்விடத்திற் பட்டாயோ"

"நாதா! நாதா! உம்மருகே வர நமனும் அஞ்சுவானே. அந்தோ மிருகங்களிடத்தகப்பட்டே உயிர்நீத்தீர்போலும்? இப்பாவியின்மீது தாங்கள் கொண்ட கருணையன்றோ உம்மைக் கொல்வதற்கேதுவாயிருந்தது. ஐயோ! இனி எங்களை இரக்ஷிப்பார் யார்? தமது பாலகன் ஆகாரமின்றி அப்பா, அப்பா என்றலறுகின்றானே. தாமெங்கே யிருக்கின்றீர். இரவைக்கழித்துச் செல்லலாமென் றெங்காவது தங்கியிருக்கின்றீரோ?

"மலையே மானே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரே நிலை தேறினர் போய்
உலையா வலியா ருழைநீருரையீர்"

மனுஷ்ய சஞ்சாரமற்ற இக்காட்டில் தாங்கள் போனவழியை நோக்கித் தனியாக நானும் புறப்பட்டுவிடுவேன். ஆனல் இந்தக் கொடும் இருட்டில் எவ்வாறு நான் வழியை யறிவது? இன்னது செய்வதென, ஒன்றும் தோன்றவில்லையே'' என்று பல விதமாய்க் கதறிக்கொண்டே அன்றிரவைக் கழித்து, மறுநாட்பொழுது விடிந்தவுடனே, தன் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு, தன் கணவன் சென்ற வழியே தானும் சென்ருள். நிற்க,

காட்டில் வில்வமரத்தின்மீது ஏறியிருந்த அங்குலன் பொழுது விடியவே தன்வலையிற் சிக்கிய இரண்டொரு விலங்குகளைமட்டும் வதைத்தெடுத்துக்கொண்டு, தன் மனைவிமக்களது பசிப்பிணியைத் தீர்க்கவிரும்பித் தன் குடிசையை நோக்கி மிகவிரைவாய் வந்தான்.

அவ்வாறுவரும் வழியில் தன்னைத்தேடிக் கண்ணுங் கண்ணீருமாய் தன் குழந்தையருடன் நடந்துவரும் மனைவியைக் கண்ணுற்ருன். அவர்களது பரிதாப நிலையைக்கண்டதும், பெரிதும் மனம் வருந்தி "ஐயோ நேற்றுமுதல் பசியால் பெரிதும் வருந்தும் நீங்கள் இக்கடுங் கானகத்தின் வழியே வருவானேன். நான் இரைகிடைக்காததால் நேற்றைப்பொழுது முழுதையும் அங்கேயே கழித்து, இன்று காலை திரும்பிவந்தேன். அதற்குள்ளாக நீங்கள் பலவகையாக எண்ணி விட்டீர்கள்போலும்! போகிறது. இனியேனும் மனக்கலக்கத்தை நீக்குங்கள். இதோ ஊன் கொணர்ந்திருக்கின்றேன். உண்டு களைப்பாறிப்பின் வீடு செல்வோம்'' என்று கூறித்தன் கையிலிருந்த மாமிசத்

தைக் கீழே வைத்தான். பச்சை மாமிசங்களையே தின்று பழக்கமானவர்களாகையினால், அவர்கள் அனைவரும் சிறிதும் வெறுப்பின்றி அவ்வூனையுண்டு சற்றுநேரம் இளைப்பாறியபின் தம் குடிசையை அடைந்தனர்.

இவ்வாறு இவர்கள் வீடுசேர்ந்த சிலநாட்களுக்குப் பிறகு, வேடுவனுயிர் நீங்கும்நாள் சமீபித்தது. இறப்பதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னரே, பல உற்பாதக்குறிகள் அவனுக்குத் தோன்றின. அதனால் விரைவில் தானிறக்க நேரிடுமே என்றெண்ணி "எனக்குப்பின் என் மனைவியையும், பாலர்களையும் போற்றுவாரொருவருமில்லையே! அவர்கள் எவ்வாறு தமக்கிரை தேடிக்கொள்ளுவார்கள்" என நினைத்து எல்லையில்லாத் துயரம் அடைந்தான். இதைத் தன் மனைவிமக்களிடம் கூறினால் அவர்கள் பெரிதும் வருந்துவரே என்பதை நினைத்து, அவர்கட்கறிவிக்காமலே இருந்தான்.

அவனிறக்கும் நாள்வந்தது. அவனுயிரைக்கவரவென்று,

"அஞ்சனக்கிரித் தொகுதி யன்னதொருமெய்யர்
மஞ்சிடியெனக் குமுறுவாய் மையர்கள்வன்வாய்ச்
சிஞ்சுகமெனத் தெறுசினத் தினர்வதைக்கும்
நெஞ்சினர்கள் காலபடர் வந்தனர் நிறைந்தார்"

"எற்றுதிரெனச் சிலரியம்புவர்கள் வாளாற்
செற்றுதி ரெனச்சிலர் செயிற்பர் நெடுநாணிற்
பற்றுதிரெனச் சிலர்பகர்ந்திடுவர் வேலால்
இற்றுடல் கழித்திட எறிந்திடுமினென்றார்"

இவ் வர்ரவாரிப்புடன் யமதூதர்கள் பலர் இவனுயிரைக்கவர வந்தனர். அச்சமயத்திலேயே சிவபெருமானுல் அங்குலனது உயிரைக்கொண்டுவா வென்று, அனுப்பப்பெற்ற பூதகண நாதர்களும் அழகியதோர் விமானத்துடன் அங்கு வந்திருந்தனர்.

காலதூதர்கள் கொடு நாகம்போன்ற கால பாசத்தை சிவபக்தனுய அங்குலன் மீதெறிந்து பிணிப்பதைக்கண்டதும், அவர்கள் மிகவும் கோபங்கொண்டு, அவனைப்பிணித்திருந்த அப்பாசத்தைத் தம் வலிமையால் நீக்கி, தாம் கொணர்ந்த விமானத்தின்மீது வேடனை ஏற்றி, கைலாசகிரியை நோக்கிப் புறப்படத் தயாராயினர் அச்சமயம் யமதூதர்கள் அவர்களை நோக்கி,

"யாவர் விடுத்ததூதுவர் நீரியாங்கள் பற்றுமிவன்றன்னை
காவல்விடுத்து விமானமிசை யேற்றிவானிற் கடிதகல்வீர்
மேவுமிவனை விண்மேவ விடுத்தற்கிசையோ மிவ்வேடன்
பாவமிழைத்த தன்றியறன் உண்டேலதுவும் பகர்ந்திடுவீர்"
"கற்பங்கழிக்கும் விரிஞ்சன் முதலெங்கோனுணை கடப்பதன்ருல்
பொற்பொன்றிய இந்திரன் முதலாம்புத்தே ளெவரும்புரந்திடினு
மற்பந்தவமென்றி யற்ருனைவிமானத் தேற்றியகறிரெனில்
வெற்பின் தலைகள் போலுமது சிரங்களுருள வீட்டுவமால்"

"பிரம்மாவிஷ்ணு ருத்திரன் முதலிய முக்கடவுளரும் எம்மிறைவனுய யமனது ஆணையைக்கடக்க அஞ்சுவார். அவ்விதமிருக்கச் சிறுதும் பயமின்றி நாங்கள் கொண்டு செல்லுதற்குறிய இவ்வேடனது உயிரை விமானத்திலேற்றி, மிக மரியாதையாயழைத்துச் செல்லுகின்றீர்கள். இத்தகைய பெறுமை பெறுதற் கேற்றவாறு இவன் வாழ்நாள் முழுவதி

னும் ஏதாவதோர் நன்மையேனும் செய்திருக்கிறுனு? உங்களுக்கு உரியதல்லாத காரியத்தைச் செய்யாதீர்கள். அவனை இங்கேயே விட்டுச்செல்லுங்கள். இல்லையாயின் எங்களது வன்மையால் உங்களையும் வென்று, அவனையும் எங்கள் பாசத்தாற்பிணித்துச் செல்லுவோம்'' என்று சினந்து மொழிந்தனர்.

இம்மொழிகள் தம்செவிகளிற்படவே கணநாதர்கள் கோபங்கொண்டு,

"எங்கள் பெருமானடியார் தம்மடியார் நீவிரெதிர்ந்தெம்பால்
பொங்கு செருக்கிற்புய வீரம்புகலத்தகுமோ பொறியில்லீர்
சிங்கம் உருத்துவரும்போது சிறுபுன்முயலோ செருவேற்கும்
கங்கை முடித்தானடியார் முன்காலபடரோ எதிர்வதுவே"

"உங்கள் தலைவன் உயர்ந்த யமனேயானுலும், எங்கள் சிவபெருமானடியார் முன் அவன் எம்மட்டு? யானை முன்னிற்கும் கொசுவேயாவன் அன்றே? காலகண்டனுலனுப்பப்பெற்ற தூதர் என்பதைச் சிறிதும் மதியாது மனம்போன வாறெல்லாம் பிதற்றினீர். உமதறிவின்மையை என்னென்றுரைப்பது?'' என்று பலவாறு இழிந்துபேசி, அவர்களை நன்ருய் அடித்து வெருட்டிவிட்டு, தாங்கள் கொணர்ந்த விமானத்தில் வேடவனை ஏற்றி, வெள்ளியங்கிரி என்று புகழப்பெற்ற கைலாசகிரியை யடைந்தனர்.

சிவபெருமானது கணங்களாலடித்துத் துரத்தப்பட்ட யமபடர்கள், அங்கஹீனர்களாய் ஓடோடியுஞ் சென்று யமனது இருபாதங்களினும் விழுந்து, "சுவாமி எங்களைக்காக்க வேண்டும், காக்கவேண்டும்'' என்று கூறினர்.

இவ்வாறு அவர்கள் சரணமடைந்த சமயத்தில் உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளையும் கொன்றுவருவதற்கென்று நியமிக்கப்பட்ட காலன், மிருத்து, அந்தகன் மூவரும் பற்களை நெறு நெறுவென்று கடித்துக்கொண்டும், கண்களின்று நெருப்புப் பொறிகள் பறக்கவும் யமனருகே நின்றனர்.

உயிர்களை மாய்ப்பதற்கு உதவியான குஷ்டநோய், சுரம், வறுமை முதலிய நோய்கள் பலவும் அவனது ஏவலில் கைகட்டி நின்றன. இவற்றுடன் மறதி, சோம்பல், வருத்தம் அழுகை, பசி, சினம், தாகம் முதலிய பல தீக்குணங்களும் காலனிடும் ஏவலை எதிர்பார்த்து அருகே நின்று கொண்டிருந்தன.

அநேக ரிஷீசுவரர்களும் பழமையான நூல்களைக் கற்றதனால், நமனுக்குதவியாய் நியமிக்கப்பெற்ற சித்ரகுப்தனும், இன்னும் பலதேவர்களும் அருகிலுள்ள ஆசனங்களிலமர்திருந்தனர்.

தூதர்கள் மண்டையுடைந்தும், கைகால்களொடிந்தும், மெய் நடுங்கியும், யமனது பாதங்களில் விழுந்ததைக் கண்டதும், சபை முழுதும் பயந்து நடுங்கிற்று. யாவரும் இனி ஒரு நொடியில் உலகமுழுதும் தீய்ந்து போமென்றெண்ணினர்.

தனது படர்களது பரிதாபநிலையைக் கண்டதும், நமன் கோபங்கொண்டு, அவர்களை நோக்கி "எனது தூதர்களான உங்களுக்குத் துன்பமிழைப்போர் இம்மூவுலகத்தினும் ஒருவருமில்லையே! அவ்விதமிருக்க நீங்கள் இக்கோலமடைந்த காரணமென்ன? என் வேடுவனுயிரைக் கவராது

வந்தீர்கள்? விரைவிற் கூறுங்கள். உங்களுக்குத் தீங்கிழைத்தோர் எவரேயாயினும் அவர்களை இதோ ஒரு நொடியிற் றீய்த்து விடுகின்றேன்" என்று இடிமுழக்கம்போற் கர்ச்சித்தான்.

அப்பொழுது உலகங்கள் யாவும் நடுங்கின. சூரியனும் பயந்து மறைந்தான். திசைகள் யாவுமிருண்டன. இமையவர்கள் ஊழியிறுதி நாள் அன்றுதானோ என்று பயந்தனர்.

இவ்வாறு பெருங்கோபத்துடன் யமன், தன் தூதர்களை வினவியதும், அவர்களவனைத் தொழுது நோக்கி, "அண்ணலே! யாங்கள் எவ்வாறு உரைப்போம்? எந்தையே! தமதாணையைச் சிரமீதேற்று, பஞ்சமாபாதகனுய அவ்வேடனுயிரைக் கவரச் சென்றோம். சென்று பாசத்தை யவன் மீது வீசிப்பிணித்தோம். அப்பொழுது, பத்துத்திசைகளிலும் ஒளிவிரிக்கின்ற பொன்மயமான விமானத்துடன் வந்திருந்த கணநாதர்கள் எம்மை வளைத்துக்கொண்டனர். எங்களை எதிர்த்ததுமன்றி, அவர்கள் எங்களால் வீசப்பெற்ற பாசத்தை யவனுடலினின்றும் கழற்றியெறிந்து, அவனையுந் தூக்கித்தம் விமானத்தில் ஏற்றிக் கைலாசகிரியை நோக்கிச் சென்றனர்."

"அவ்வாறுசென்ற அவர்களை யாங்கள்மறித்து, எமக்குரித்தாய அவனது உயிரை அவர்கள் கவர்ந்து செல்வது ஞாயமல்லவென்று மொழிந்தோம். உடனே யவர்கள் அவ்வேடன் சிவபெருமானது பக்தனென்றும், அப்பெருமானது ஆணையின்மீதே அவனுயிரைக் கவர்ந்து செல்வதாகவும் கூறினர். வாழ்நாளில் யாதொரு நற்கருமமும் புரியாது,

எப்பொழுதும் கொலை களவு முதலிய தீச்செயல்களையே செய்யும் அப்பாதகனைப் பக்தனென்று கூறியது எங்ஙனம் என்று யாங்கள் வினவ, அவர்கள் பெரிதும் கோபங் கொண்டு தங்கள் கைகளிலிருந்த ஆயுதங்களால் எங்களை யடித்துத் துரத்திவிட்டனர். அவர்களடித்த அடிகளினால் எங்களிற் சிலரது சிரங்கள் உடைந்தன. இந்நிலைமையில் நாங்கள் தம்மைநோக்கி ஓடிவருகையில்,

'அன்னவர் சொன்ன அழற்சொல்
தென்னவ நின்னிடை செப்பில்
சொன்னவர் நாவு துணிந்தே
மன்னிய மண்ணிடை வீழும்'

இத்தகைய பழிச்சொற்களையும் பகர்ந்தனர். இனி யாங்கள் என் செய்வோம். இறைவா! தேவரீரே கதி" என்று மொழிந்ததும் முன்னாலேயே காலனுக்கு உண்டாயிருந்த கோபம் மிகவும் வளர்ச்சியடைந்தது.

இம் மொழிகளைக் கேட்டதும் யமன் தன் அருகில் முனிவர்களுடன் வீற்றிருந்த கணக்கன் சித்திரகுப்தனை யழைத்தான். கணக்கனும் காலனது அடிகளில் தன் முடி தோய வணங்கி எழுந்து நின்றான். உடனே மறலி அவனை விளித்து, "சி த் தி ர கு ப் த! பாதகத் தொழில்களையே இழைத்துவந்த அவ்வேடன் சிவதூதர் அழைத்துச் செல்லு மாறு செய்த தவமென்ன? விரைவிற் கூறு" என்று வினவினான்.

உடனே கணக்கன் "எந்தாய்! அக் கிராதன் பிறந்தது முதல் இறக்குந்தறுவாய்வரை பாதகமேயன்றி ஓர் நற் கருமமும் செய்தறியான். இவ்வுலகில் இதுகாறும் எத்

தனைப்போ பெயர்கள் எண்ணிலாத பாபச்செயல்கள் செய்தோர் உளரெனினும் இவனைப்போன்று மிக்கபாதகர் ஒருவருமே இல்லை. அவ்விதமிருக்கச் சிவதூதர்கள் அவனைக் கைலையங்கிரிக் கழைத்துச் சென்றது நியாயமன்று. வேலியே பயிரையழித்தால், பயிர் வளருவது எவ்விதம்? அதேபோல் சிவபெருமானே தர்மத்தை யழிக்கத்தொடங்கினுல் நாம் என் செய்வது?'' என்று கூறி நின்ருன்.

இதைச் செவியேற்றதும் யமன் சித்திரகுப்தனை நோக்கி ''கணக்கனே! இனி நானிவ்வேலையை விரும்பேன். இதோ இதற்குரிய சின்னங்களாகிய தண்டு, பாச முதலியவற்றைச் சிவபெருமான் முன்னரே வைத்துவிடுவேன். நீயும் என்னுடன் வருவாயாக'' என்ருன். சித்திரகுப்தனும் அதற்குஇசைய, இருவரும் சிவபெருமான் வாழ்ந்துவந்த வெள்ளியங்கிரியை நோக்கி விரைந்து சென்றனர்.

வெள்ளிமால் வரையில், ரத்தினகசிதமான சிவபெருமானது ஆலயமடைந்ததும் மறலி தன் வாகனத்தினின்றிழிந்து, அவ்வாயிற் காவலராகிய நந்தீசுவரரிடம் சென்று, தன் வரவைச் சிவபெருமானுக்கறிவிக்குமாறு வேண்டிக்கொண்டான். நந்தியும் கூற்றுவனது வேண்டுகோட்கிணங்கி, அவனது வரவைச் சிவபெருமானுக்கு அறிவித்தார். பெருமானும் காலனை யழைத்துவருமாறு நந்திக்கு உத்திரவு அளித்தார். நந்தி, பெருமானது உத்திரவை யறிவித்ததும் யமனும் ஆலயத்துள் சென்ருன்.

அச்சமயம் சிவபெருமான் நவரத்தினங்களிழைத்த ஓர் பீடத்தின் மீதமர்ந்திருந்தார். அவரது ஜடா மகுடத்தில் விளங்கிய சந்திரனது ஒளியும், மேனியிற்பூசிய திரு

நீற்றின் ஒளியும்சேர்ந்து அம்மண்டபம் முழுவதும் பிரகாசித்து விளங்கியது. அவரருகில் பிரம்மாவும், விஷ்ணுவும் முறையே தத்தம் ஆசனத் தமர்ந்திருந்தனர். அக்கினி, வாயு, வருணன் முதலிய தேவர்கள் பலர் அவரது ஏவலில் அங்கு நின்றுகொண்டிருந்தனர். கணபதியும் மயில்வாகனனுகிய சுப்பிரமணியனும் அச்சபையிலிருந்தனர். இந்திரன், குபேரன் ஆகிய இருவரும் அங்கு அமர்ந்திருந்தனர். நாரதர் முதலிய இசைவல்ல முனிவர்களும் மற்றும் பற்பல தவச்சிரேஷ்டர்களும், யக்ஷ, கின்னரர்களும், ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய மாதர்களும், எல்லோரும் எள்ளிடவும் இடமின்றி எங்கும் நிறைந்திருந்தனர். இச்சபையில் வந்தடைந்த காலன், உலகிற்கெல்லாம் ஒங்கொரு தலைவனுய் விளங்கும் சர்வேசுவரனது பாதங்களில் விழுந்து, தொழுதெழுந்து "சுவாமி அடியேன் செய்யவேண்டுவதோர் விண்ணப்பமுண்டு" என்று சொல்லி நின்றுன்.

உடனே பரமசிவன் அவனைநோக்கி "நமனே! திடீரென்று நீ இங்குவந்த காரணம் என்ன? ஏதோ ஓர் விண்ணப்ப முண்டென்றுய்? அது என்னவென்று விரைவில் கூறுவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினுர்.

இவ்வாறு பகவான் கூறியதும் யமன் அவரை நோக்கி "மறைமுதலே! புவனங்களை யெல்லாம் படைப்பதற்கு நான்முகனையும், காப்பதற்கு மஹாவிஷ்ணுவையும், மழை பொழிய வருணனையும், இயங்க வாயுவையும், பாதகரைத் தண்டிக்க என்னையும் நியமித்தீர். எல்லா உலகங்களும் தங்கள் கட்டளையை மீருமல் அதற்கடங்கியே நடந்துவருகின்றன. இவ்வளவும் ஏற்படுத்திய தாமே இப்பொழுது இவற்

றைச் சிதைக்க முயன்றால் இனி அதைத் தவிர்ப்போர் யாவர்?

'வேலைகரையிழந்தால் வேதநெறி பிறழ்ந்தால்
ஞாலமுழுதும் நடுவிழந்தால்'

யார்தான் என்ன செய்யக்கூடும்? உலகங்களுக் கெல்லாம் மூலகாரணமாய் விளங்கும் மூர்த்தி! தேவரீரே நெறிமாறி யிருப்பின், புன்மைநிரம்பி விளங்கும் இந்நரகைக்காக்க இனி என்னால் ஒரு மாத்திரையேனும் முடியாது. நரகத்துக்கு இறைவன் யானென்பதற் கறிகுறியாகத் தாம் கொடுத்த தண்டு, பாசமுதலியவற்றை இதோ தம் திருமுன்வைத்து விட்டேன். என்மீது கருணைகூர்ந்து, இவற்றை ஏற் றருள்க," என்று கூறி வணக்கமாய் வாய்புதைத்துக் கை கட்டி நின்றான்.

மேற்கூறியவாறு மறலி யுரைத்துத் தான் கூறியவாறே தண்டு, பாச முதலியவற்றைக் கீழே வைத்திடவும், ஐயன் தன் பற்கள் இளநிலாப்போல ஒளிபரப்பிப் புன்முறுவல் செய்து, அவனை நோக்கி "மறலீ! நீ கூறியவாறு ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொருவரை யான் நியமித்தது உண் மையே. ஆனால் அவற்றை யானே கடந்து நடந்துவிட்டதா கக் கூறினை. அதன் விவரமறிய விரும்புகிறேன்" எனலும் யமதருமன்,

"எம்பெருமானே! தாய்வயிற்றினின்று வெளிவந்தது முதல் இறக்கும்வரை பொய், கொலை, களவு முதலிய பாத கத் தொழில்களையே புரிந்து வந்தவனான அங்குலனென் னும் அவ் வேடன் நும்முலகடையுமாறு செய்த நற்செயல் என்னை? பெருமையான யாகங்கள் செய்தானா? இரவும் பக

னும் இடைவிடாமல் தானங்கள் செய்தானு? இத்தகை நற் கருமங்கள் பலபுரிந்தோ ரடைதற்குரிய உமது உலகத்தை இம்மறவன் அடைந்தகாரணம் தான் என்ன? அருளுக'' என்று வணக்கமாய் வினவி நின்றான்.

பின் சிவன் யமதர்மனைநோக்கி "இவ்வேடன் ஒருநாள் விலங்குகளைக் கொல்வதற்காக வேட்டைமேல் ஒருகாட்டில் மேவி சிவராத்திரியில், கங்குல்முழுதும் தன்னருகிலிருந்த வில்வமரத்தின் தளிர்களால் நம்மை அர்ச்சித்து நம் அருகி லேயே அமர்ந்திருந்தான். இவ்விஷயத்தை உன் கணக்கன் சித்ரகுப்தனுமறியான். நீயுமறியாய்'' என்றருளினர். அதைக்கேட்டு யமனருகிலிருந்த சித்ரகுப்தன் எழுந்து, 'வேதங்கள் காணு விமலனே! ஆதிமூர்த்தி! இவ்வேடன் சிவராத்திரியின் பெருமையறிந்து விழித்திருந்தவனல் லனே! முறையே பூஜை முடித்தவனுமல்லன். ஊன் கிடைக்காத காரணத்தால் உணர்வொழிந்தான். மான் முதலிய ஜந்துக்களின் வருகை நோக்கி, தூக்கத்தை ஒழித் தான். எய்யும் அம்புகளைத் தடுக்கக்கூடியனவும், வரும் பிராணிகளைத் தன் பார்வையினின்றும் மறைக்கக்கூடியனவு மாகிய வில்வத்தழைகளை வெட்டிவீழ்த்தினன். இவ்வளவே யன்றி பித்தனுகிய இவ் வேடன் தமது பெருமையையும், சிவராத்திரியின் சிறப்பையும் உன்னி இழைத்த செயல் ஒன்றேனுமுண்டோ! இந்நிலையில் தமது கணநாதனுக இவ் வேடன் என்ன உரிமையுடையவன்?'' எனக்கூறிக் கரங் குவித்து நின்றான்.

இவற்றைச் செவியுற்ற சிவபெருமானும் புன்னகை செய்து சித்திரகுப்தனை நோக்கி, "அப்பா நீ கூறியயாவும்

உண்மையே. வேடன் உண்மை உணர்வோடு நம்மைப் பூஜிக்காமல் தற்செயலாய்ப் பூஜை நிகழ்த்தியதாலன்றே நமது கணநாதனுயினுன். உண்மை உணர்வோடு சிவராத்திரியில் விழித்திருந்து நமக்குப் பூஜை நிகழ்த்தியிருப்பின் முக்தனுகி என்வடிவிலே அமைவனன்றே! யமதர்மனே!

"நல்ல விரதங்கள் நாடோறும் மீட்டுகினும்
வல்ல முதுவேள்வி வரம் பிலது செய்திடினும்
எல்லையறு தானங்கள் எந்நாளுமீ ந்திடினும்
ஒல்லைக் கதிநல்கும் சிவநிசிக்கொன் ருெவ்வாதே"

உயர்ந்த பல விரதங்களைத் தினந்தோறும் கையாண்டு வந்தாலும், எல்லையில்லாத பல யாகங்கள் இயற்றினுலும், அன்னதான முதலிய தானங்கள் செய்து உயர்ந்தாலும், அவற்றுள் ஒன்றேனும் நமக்கு உகந்த சிவராத்திரியில்விழித்திருந்து நம்மைப் பூஜித்த பலனுக்கு ஒப்பாகாது. ஆதலால் அவ்விரதத்தின் அளவு அறியாது பிதற்றினுப். இனி அத்துயரை ஒழித்து முத்திரையையும் செங்கோலையும் தாங்கி உன் வைவசுவத பட்டினத்திற்குப் போவாயாக" என்றூர்.

இவ்வருள் மொழிகளைச் செவியேற்ற யமதர்மன், அகமகிழ்ந்து கண்ணுதலைப் பணிந்து "மங்கையொருபாக மாதவனே! அறியாது பிதற்றிய மொழிகளைப் பொறுத்திட வேண்டும்" என்றுகூறி விடைபெற்றுச் சென்றுன்.

வளைந்த வில்லினைத் தாங்கிய அங்குலனும் சிவபெருமானது கணங்களுக்கு நாதனுகி அரம்பையரும் மற்றும் பலரும் தன்னைப் புடைசூழ பரமபக்தனுய் கைலாசகிரிச் சாரலில் இனிது வாழ்ந்தான்.

மறந்தும் பூஜித்தவர் மாபாதக ராயினும்
சிறந்தே விளங்கிச் சிவனருள் பெறுவரே.

சுபம்! சுபம்!! சுபம்!!

184408

# Suitability of our Publications.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Health Maxims | Suitable | for | 1, 2, 3 Classes. |
| 2. | Ramayanam | ,, | ,, | 2nd Class. |
| 3. | Baratham | ,, | ,, | 3rd Class. |
| 4. | Kathaipoongothu | ,, | ,, | 3rd Class. |
| 5. | Sri Meenakshi | ,, | ,, | 4th Class. |
| 6. | Pratap Singh | ,, | ,, | 5th Class. |
| 7. | Moral Stories (Selected Sixty) | ,, | ,, | 5th Class. |
| 8. | Sanmarga Bodhini | ,, | ,, | 5th Class. |
| 9. | Rajput Gem | ,, | ,, | I Form. |
| 10. | Hematha Singh | ,, | ,, | I Form. |
| 11. | Pradyodayan | ,, | ,, | II Form. |
| 12. | Rangunandanan | ,, | ,, | III Form. |
| 13. | Thiruvilayadal Moral Stories | ,, | ,, | III Form. |
| 14. | Meerabai | ,, | ,, | IV Form. |
| 15. | Modern Elementary Mathematics Bk. I | ,, | ,, | I Form. |
| 16. | History of India in Tamil Book II | ,, | ,, | I Form. |
| 17. | Tamil Gramatical Primer | | | Forms I to III. |
| 18. | Tamil Poetical Selections | | | IV Form. |
| 19. | Harihara Bakthas | | | II Form. |
| 20. | Nitthilakovai | | | V Form. |

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

*உடுக்குறியுற்றன துரைத்தனத்தார் அங்கீகரித்தவை.

பரிதிமாற்கலைஞன் பிரசுரங்கள்:— ரூ. அ. ப.

1. * கதைப்பூங்கொத்து ... ... 0—3—0
2. * பிரதாபசிங் ... ... ... 0—3—0
3. * சுகாதார வாக்கிய விளக்கம் ... 0—1—0
4. * ராமாயணச் சுருக்கம் ... ... 0—2—6
5. * பாரதச் சுருக்கம்... ... ... 0—3—0
6. * மீராபாய் ... ... ... 0—12—0
7. * ஸ்ரீ மீனாக்ஷி ... ... ... 0—3—0
8. * திருவிளையாடல் சுருக்கம் ... 0—10—0
9. * சிறுகதை யறுபது ... ... 0—6—0
10. * சன்மார்க்க போதினி ... ... 0—5—0
11. * இந்துதேசச் சரித்திரம் for I Form 0—8—0
12. * நவீன ஆரம்ப கணிதம் for I Form 1—0—0
13. * தமிழ் ஆரம்ப இலக்கணம் for I to III Forms 0—5—0
14. * தமிழ்க்கவிமாலை ... ... ... 0—5—0
15. ஹரிஹர பக்தர்கள் ... ... 0—3—0
16. நித்திலக்கோவை... ... ... 0—10—0

பரிதிமாற் கலைஞன் நீதி நூல் மாலை மலர்:=

1. உலகநீதி மூலமும் உரையும் ... 0—0—9
2. ஆத்திசூடி மூலமும் உரையும் ... 0—0—9
3. கொன்றைவேந்தன் மூலமும் உரையும் 0—0—9
4. வெற்றிவேற்கை மூலமும் உரையும் 0—0—9

Paridimarkalaijnan Mapdrawing exercise Book I for class V. 0—4—0

பரிதிமாற் கலைஞன் புத்தகசாலைப் பிரசுரம்:-

1. * ரஜபுத்திர ரத்தினம் ... ... 0—3—0
2. * ரகுநந்தனன் ... ... ... 0—12—0
3. * பிரத்யோதயன் ... ... ... 0—6—0
4. * ஹேமசிங் ... ... ... 0—4—0

வி. சூ. சுவாமிநாதன்,
புத்தக வியாபாரி, மதுரை.

Printed at the Harisamaya Divakaram Press, South Marret Street, Madura.